

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2047 | டிசம்பர் 22, 2016 | புரட்சி 15 | முழக்கம் 49 | விலை: ரூ.3.00


## கோயிலுக்கு வராதே!

“மனம் புண்படுகிறது என்று நினைப்பவர்கள் எல்லாம் எனது நாடகத்தைப் பார்க்க வரவேண்டாம்” என்று அறிவித்தார், மறைந்த புரட்சி நடிகர் நடிகவேள் எம்.ஆர். ராதா. இது நேர்மையான ஒரு கடவுள் “மறுப்பாளனின்” பிரகடனம்!

“கோயில் கருவறைக்குள் நுழையாதே! இங்கே நான் மட்டுமே கடவுளின் பிரதிநிதி. இதோ பார், எங்களிடம் உச்சநீதிமன்றத் தீர்ப்பே இருக்கிறது” என்று பூணூல் மார்பை தட்டிக் கொண்டே பேசுகிறார்கள் அர்ச்சகப் பார்ப்பனர்கள். இது பார்ப்பனத் திமிரின் அடையாளம்.

“உன்னை இழிவு செய்யும் கோயிலுக்கு ஏன் மானங்கெட்டுப் போகிறாய்? அங்கே அர்ச்சகப் பார்ப்பானிடம் தட்சணையை கொடுத்துவிட்டு, கை கட்டி கர்ப்பகிரகத்துக்கு வெளியே நிற்கிறாயே; இது அவமானமில்லையா? அப்படியே உனக்கு பக்தி பீறிட்டு நிற்கிறது என்றால் உடைக்க வேண்டிய தேங்காயையும், கொளுத்த வேண்டிய கற்பூரத்தையும் கோயிலுக்கு வெளியே உடைத்து, நீயே வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போ. ‘சூத்திரன்’ என்று இழிவுபடுத்தும் அர்ச்சகப் பார்ப்பானிடம் கை கட்டி நிற்காதே.” இது பெரியாரின் சுயமரியாதைக்கான போர்க் குரல்.

“இதோ பார், பார்ப்பன துவேஷி; இந்து மத விரோதி” என்று பார்ப்பனர்கள் பொங்கினார்கள். பக்தி போதை தலைக்கேறிய சூத்திரத் தமிழர்கள் சிலரும் ‘ஒத்து’ ஊதினார்கள்.

குத்தூசி குருசாமி ஒரு முறை இப்படி எழுதினார்: “தம்பி, வெள்ளரிக்காயை தின்றுக் கொண்டே மலம் கழிக்கிறாயே; வேண்டாமப்பா என்று சொன்னால், நான் அப்படித்தான் சாப்பிடுவேன், விரும்பினால் அதையே தொட்டுக் கொண்டு சாப்பிடுவேன்” என்று பதில் சொல்கிறான் தமிழன்.

“இப்போது ஏனப்பா, இந்த கதையெல்லாம்? நீ என்ன சொல்ல வருகிறாய்?” என்று நீங்கள் கேட்கலாம். நேரடியாகவே செய்திக்கு வந்து விடுகிறோம்.

திருப்பதி தேவஸ்தானம் ஒரு அறிவிப்பை பத்திரிகைகள் வழியாக வெளியிட்டிருக்கிறது.

“வரும் புத்தாண்டு நாளிலும் (அதாவது ஆங்கில புத்தாண்டு) வைகுண்ட ஏகாதசி நாளிலும், திருப்பதி திருமலைக்கு முதியோர், மாற்றுத் திறனாளிகள், கைக் குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள் தரிசனத்துக்கு வர வேண்டாம்; தவிர்த்துக் கொள்வது நல்லது. பக்தர்கள் கூட்டம் அதிகம் வரக் கூடும் என்பதால், இவர்களுக்கு தனி பாதுகாப்பு வசதிகளை எங்களால் செய்து தர முடியாது” என்பதே அந்த அறிவிப்பு.

“ஏழுமலையானை நம்பி பக்தர்கள் வர வேண்டாம்; உங்கள் பாதுகாப்புக்கு நிர்வாகம் பொறுப்பேற்க முடியாது என்று தேவஸ்தானம் இன்னும் வெளிப்படையாகவே அறிவித்திருக்கலாமே” என்று கேட்டுவிடக் கூடாது.

கடவுள் நம்பிக்கையை தேவஸ்தானமும் கைவிட்டுவிட்டது என்ற குட்டு உடைந்துவிடும்!

ஏகாதசி நாளில் சொர்க்க வாசல் திறக்கும் போது ‘உள்ளே நுழையும் வழி – வெளியேறும் வழி’ என்ற இரண்டுமே இருக்கிறது என்ற நம்பிக்கையில்தான் பக்தர்களே சொர்க்க வாசலுக்குள் நுழைகிறார்கள். ‘அப்படியே நேராக சொர்க்கம் போகலாம், வா’ என்று பகவான் அழைத்தால் ஒரு பக்தரும் கடவுளை திரும்பிக்கூட பார்க்க மாட்டார்ன்னு; இதுதான் பக்தியின் இன்றைய நிலை!

கோயிலுக்கு போகாதே என்றால் அது மத விரோதம்! ‘கோயிலுக்கு வராதே’ என்று தேவஸ்தானம் கூறினால் அதற்குப் பெயர் பாதுகாப்பான பக்தி நல்லா இருக்குப்பா, உங்க கதை!

– கோடங்குடி மாரிமுத்து

### சேலம் வேத மரபு மறுப்பு மாநாட்டு சிந்தனை

# பவுத்தர்களை வீழ்த்திய பார்ப்பனர்கள்

வேத மரபுகளை எதிர்த்தவர்களை பார்ப்பனர்கள் சூழ்ச்சிகரமாக வீழ்த்திய வரலாறு – கடந்த இரண்டு இதழ்களில் வெளி வந்தது. பவுத்தத்தை வேத மரபு வீழ்த்தியது எப்படி?

- பவுத்தத்தை முற்றிலுமாக ஒழித்து, மீண்டும் வேதத்தை அரியணையில் ஏற்றத் துடித்தார்கள் பார்ப்பனர்கள். இதற்கு - முதலில் கடவுள் மறுப்புக் கொள்கையாளர்களின் படைப்பு இலக்கியங்களை எல்லாம் அழித்து ஒழிக்கும் வேலையைத் துவக்கினர். குறிப்பாக நாத்திகத்தை வலியுறுத்திய லோகாயதவாதிகளின் இலக்கியங்களை முழுமையாக மீட்கவே முடியாதவாறு அழித்து ஒழித்து விட்டனர். இந்த லோகாயதர்களின் வேத-கடவுள் மறுப்பு சிந்தனைகளை எதிர்த்தும், இகழ்ந்தும் பார்ப்பனர்கள் எழுதிய நூல்களிலிருந்து தான் துண்டுதுண்டாக லோகாயத வாதம் பற்றிய கருத்துகள் காணக் கிடக்கின்றன. இதுபற்றி பிரபல ஆய்வாளர் பிரசாத் சட்போ பாத்யாயா இவ்வாறு கூறுகிறார்:

  “பிற சிந்தனை மரபுகளின் படைப்பிலக்கியங்களாவது ஓரளவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனால் லோகாயதர்களின் உன்னதப் படைப்பிலக்கியங்களின் மூலப்படிகள் மீட்கவே முடியாதவாறு அழிக்கப்பட்டு விட்டன. துண்டுதுண்டாக வெட்டப்பட்ட சில வரிகள் காணக் கிடைக்கின்றன. அவை கூட லோகாயத எதிர்ப்பாளர்களின் நூல்களில் தான் உயிர் வாழ்கின்றன.”

- படைப்பிலக்கியங்களை மட்டுமல்ல; புத்தக் கலைகளையும் - பண்பாட்டையும் அழித்து ஒழித்தனர்; புத்த மடலாயங்களை எல்லாம் அழித்தார்கள்.
- நயவஞ்சகமாக படுகொலைகளைப் புரிந்து ஆட்சிக்கு வந்த புஷ்யமித்திரன் என்னும் பார்ப்பன அரசன், அசோக மன்னர் நிறுவிய 84,000 கல்வெட்டுத் தூண்களை இடித்தான். இந்தக் கல்வெட்டுத் தூண்களில் அசோகர் பிறப்பித்த சமூக சீர்திருத்த அரசு ஆணைகளும், புத்தரின் சிந்தனைகளும், மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தன.
- பவுத்த பிக்குகளும், பிக்குனிகளும், பவுத்தத்தைத் தழுவிய பாமர மக்களும், ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். பவுத்தத்தை வேரும் வேரடி மண்ணோடும் அழிக்கும் வரை, இந்தப் படுகொலைகள் தொடர்ந்தன.
- காஷ்மீரத்தைச் சார்ந்த பிரபல வரலாற்று ஆசிரியர் கல்கணன் கூறுகிறார். “பிறர் பற்றி பழி கூறுவோர் சிலரின் தூண்டுதலால் ஜாலுக்கண் என்ற காஷ்மீர மன்னன், பவுத்த மடாலயங்களிலிருந்து எழுப்பப்படும் சங்கொலி, தனது தூக்கத்தைக் கெடுப்பதாகக் காரணம் கூறி அவற்றை இடித்துத் தள்ளினான்.”
- ஆய்வாளர் கல்கணன் மற்றொரு அதிர்ச்சியான தகவலையும் தருகிறார். அபிமன்யு என்ற காஷ்மீரை ஆண்ட பார்ப்பன மன்னன், பவுத்தர்களை இனப் படுகொலை செய்தான் அது இனப்படுகொலை அல்ல என்றும், கடும் பனிப் பொழிவினால், இறக்கிறார்கள் என்றும் பொய்ப் பிரச்சாரம் செய்தான்; இந்தப் படுகொலைகள் நடக்கும் குளிர்காலமான 6 மாதங்களில் - தனது நாட்டைவிட்டு அவன் வெளியேறி விடுவான். தன்வ பிஷாரா என்ற பள்ளத்தாக்குப் பகுதியில் தங்கி விடுவான்; பவுத்தர்கள் படுகொலைகள் நாட்டில் திட்டமிட்டபடி நடக்கும். கடும் பனியினால் பவுத்தர்கள் மட்டும் தான் இறப்பார்களா? பார்ப்பனர்கள் ஏன் இறப்பதில்லை? “பார்ப்பனர்கள் இறக்காததற்குக் காரணம் அவர்களிடம் உள்ள ஆன்ம சக்தி; அந்த ஆன்மீக சக்தியைப் பயன்படுத்தி, அவர்கள் கடவுளுக்கு யாகங்களையும், படையல்களையும் செய்ததால், அவர்கள் சாவதில்லை. பவுத்தர்கள் அவ்வாறு செய்யாததால் மரணமடைந்தனர்” என்று விளக்கம் கூறினான், அந்தப் பார்ப்பன மன்னன்.
- பவுத்த மதத்தினர், ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றார்கள் என்று கூறி, ஆத்திரமடைந்து, ஆயிரக்கணக்கான பவுத்த மடாலயங்களைத் தீக்கிரையாக்கினான், காஷ்மீர் மன்னராகிய நரன் என்ற கின்னரன். பவுத்த மதத்தினர் வாழ்ந்த அந்தக் கிராமங்களில் மத்திய மாதா எனும் பகுதியிலிருந்து பார்ப்பனர்களைக் கொண்டு வந்து குடியேற்றினான். இவை எல்லாம் ஆய்வாளர் கல்கணன் தரும் தகவல்கள்.
- காஷ்மீர் பகுதியில் மட்டுமல்ல; இந்தியாவின் பிற பகுகளிலும், பவுத்தர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். சிராவஸ்தியை ஆண்ட விக்கிரமாதித்தன் பவுத்தர்களைக் கொடுமைப் படுத்தினான். வங்காள மன்னன் சசாங்கன் பவுத்தர்களைத் தனது பிறவி எதிரிகளாகக் கருதினான். புத்தர் அறிவொளி பெற்றதாகக் கூறப்படும், போதி மரத்தை வெட்டி வேரோடு சாய்ப்பதற்குப் பலமுறை முயன்றான். கேரளாவை ஆண்ட குமாரிலபட்டன் கொடுமை தாங்காமல், பவுத்த மதத்தினர் அனைவரும் கேரளாவை விட்டு வெளியேறினர். சுதன்வனன் எனும் மன்னன், தனது குடிமக்களுக்கு இவ்வாறு ஆணையிட்டான், “தனுஷ்கோடிப் பாலத்திலிருந்து (இலங்கைக்கு ராமர் கட்டியதாகக் கூறப்படுவது) இமாலயம் வரை, பவுத்த மதத்தினரைக் குழந்தைகள், முதியவர்கள் என்று பாராது அனைவரையும் கொன்றுவிட வேண்டும். அவ்வாறு செய்யாதவர்கள் கொல்லப்படுவர்கள்.” இத்தகவலை ‘சங்கர விஜயம்’ என்ற நூல் தெரிவிக்கிறது, புத்த மார்க்கத்தை விரிவாக ஆய்வு செய்த பேராசிரியர் பி. லட்சுமிநரசு, தனது ஆய்வுகளில், இந்தப் படுகொலைகள் பற்றிய தகவல்களைக் கூறியுள்ளார்.
- ஆய்வாளர் டபிள்யூ.டி. வில்கின்ஸ் இவ்வாறு கூறுகிறார்: “பவுத்தருடைய சீடர்களும் பவுத்த மதத்தைச் சார்ந்த பாமர மக்களும் ஈவு இரக்கமின்றிக் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். வெட்டிக் கொல்வது, நாடு கடத்துவது அல்லது வாள்முனையில் இந்து மதத்துக்கு மாற்றுவது என்று ஏராளமான கொடுமைகள் செய்தார்கள். பிற மதத்தினர் மீது அடக்கமுறையை ஏவி விடுவதும், அட்டூழியங்கள் புரிவதும் உலகம் முழுதும் நடந்துள்ளது. ஆனால் பவுத்த மதத்தை இந்தியாவைவிட்டுத் துரத்துவதற்காக, செய்யப்பட்ட அடக்குமுறைகளுக்கும், அட்டூழியங்களுக்கும் ஈடான வேறு ஒன்று உலகின் எந்த மூலையிலும் நடந்தது இல்லை.
- ‘இந்திய வரலாற்றில் பகவத் கீதை’ நூலின் இரண்டாவது பகுதி - பகவத் கீதையின் உள்ளடகத்தை விரிவாக அலசுகிறது. கீதையின் முரண்பாடுகளையும், வர்ணாஸ்ரமக் கோட்பாடுகளையும் ஆதாரங்களோடு எடுத்துக் காட்டுகிறது. கீதை நாத்தி கர்களை அழித்தொழிக்க வேண்டும் என்று கூறுகிறது. ‘நாத்திகர்களுக்கு எதிரான போர்’ என்று - நூலாசிரியர் ஒரு தனி அத்தியாயத்தையே எழுதியிருக்கிறார்.
- “கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை; கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; பரப்பியவன் அயோக்கியன்; வணங்குகிறவன் காட்டுமிராண்டி” என்று பெரியார் கூறிய கருத்துகள் - தங்களைப் புண்படுத்துவதாகப் பார்ப்பனர்கள் கூக்குரலிடுவது வாடிக்கையாக இருக்கிறது. ஆனால், கீதையில் “வேதாந்தங்களை”த் தவிர (பார்ப்பனிய கருத்துகள்) மற்றக் கருத்துகளைப் பின்பற்று கிறவர்களுக்கு, தந்துள்ள பட்டங்கள் - படுமோசமானவை. துஷ்கருமன் (தீம்பு செய்பவன்), நர ஆத்மா (கீழ்மகன்), ஹத ஞானம் (செத்த அறிவு), அல்பமேதாவி (அறிவு கெட்டவன்), அபுத்துவன் (அறிவில் லாதவன்), நஷ்டன் (அழிந்து போனவன்), அசேதனன் (மூளையற்றவன்), சத்ய ஆத்மா (சந்தேகப் பிராணி), கடவுள் மறுப்பாளர்களுக்கு - கிருஷ்ணன் வழங்கியுள்ள பட்டங்கள் என்ன தெரியுமா? நஷ்டாத்துமா (அழிந்துபட்ட ஆத்மா), இடம்பமான் (இடம்பம் பேசுபவன்),

(4ஆம் பக்கம்)

# ‘ஆர்யபட்டரை’ வெறுத்து ஒதுக்கிய பார்ப்பனர்கள்

### சேலம் மாநாட்டுச் சிந்தனை

- பார்ப்பனியத்தின் உயிர்நாடி, வேத மதத்தின் அடிப்படைக் கருத்தியல்கள், உபநிடதங்களின் உள்ளூறை, தர்ம சாத்திரங்களின் தகிடுதத்தங்கள் ஆகிய அனைத்தும் கீதையில் உள்ளடங்கியிருப்பதை உணர்ந்து கொண்ட பார்ப்பனர்கள், எதிரிகளை சிதறடிப்பதற்கான ஆயுதமாக கீதையைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.
- கீதை - புரட்சிகரமாக தோற்றம் காட்டக்கூடிய வெற்று முழக்கங்களை மிக சாமர்த்தியமாக முன்னிறுத்துகிறது. எனவே கீதைக்கு விளக்க உரை எழுதியவர்களும், இந்த முழக்கங்களை முன்னிறுத்துவதையே கலாச் சாரமாக்கிக் கொண்டார்கள். பிறகு இந்துத்துவமே முழக்கங்களில் உயிர் வாழும் ஒரு இயக்கமாகி விட்டது.
- “கதம்பக் குவியலான கீதைத் தத்துவம், புதிது புதிதான விளக்கங்களை நுழைப்பதற்கு இடமளிக்கும் வகையில்தான் அமைந்துள்ளது. ஆனால் சமூகத் தடைகளைக் கடந்து புதுவழியில் செல்வதற்கு அது வழிகாட்ட வில்லை” என் கிறார் வரலாற்று ஆய்வாளர் கோசாம்பி.
- கீதையின் முரண்பாடுகளைப் போலவே - இந்துக்களின் பண்பு நலனும் சொல் ஒன்று, செயலொன்றாகியது. உயர்ந்த தத்துவங்களைப் பேசும் அறிவு ஜீவி யாகத் திகழும் இந்து, பிறரிடம் உறவாடுதல் என்று வரும்போது சாஸ்திரங் களையும், விதிகளையும் பின்பற்றுகிறான் என்று இந்துப் பண்பாட்டை மதிப் பிடுகிறார், ‘இந்திய வரலாற்றில் பகவத்கீதை’ நூலாசிரியர் பிரேம்நாத் பசாஸ்.
- குழப்பங்கள் நிறைந்திருந்தாலும், கீதையின் கருத்துகளுக்கு தெய்வீகம் சாயம் பூசப்பட்டதால், பல்வேறு ‘இந்து’ சிந்தனை மரபைச் சார்ந்தவர்கள், கீதையின் பக்கமே சாய்ந்தனர். கீதை சாங்கியக் கோட்பாடுகளையும் ஓரளவு பேசுவதால், பார்ப்பன மேலாதிக்கத்தைத் தடுத்து நிறுத்திவிடும் என்று, பகுத் தறிவாளர்களும் நம்பினார்கள். கீதையின் பொய்யான முழக்கங்கள், இப்படி அனைத்துத் தரப்பினரையும் ஏமாற்றியது.
- பல்வேறு சிந்தனைகளைக் கொண்டிருந்த மக்களின் மனநிலை மாறத் தொடங்கிய நிலையில், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கி.பி. 319ஆம் ஆண்டில் சந்திரகுப்தன் என்ற உள்ளூர் படைத் தலைவன், பாடலி புத்திரத் தில் ஒரு பேரரசை உருவாக்கினான். கோசலம், மகதம் ஆகிய பகுதிகளிலும் தனது ஆட்சியைப் பரவச் செய்து 16 ஆண்டுகாலம் ஆட்சி செலுத்தினான். தொடர்ந்து அவனது மகன் சமுத்திரகுப்தன் தனது எல்லைகளை மேலும் விரிவுபடுத்தினான். சந்திரகுப்தனுக்குப் பிறகு அவனது மகன் இரண்டாம் சந்திரகுப்தன் பதவிக்கு வந்து, தனது பெயரை விக்கிரமாதித்தன் என்று மாற்றிக் கொண்டான்.
- குப்தர்கள் தங்கள் ஆட்சி எல்லைப் பகுதிகளை விரிவாக்கி, ஒரு பேரரசை நிறுவினார்கள். அதற்கு வழிமுறைகளைக் காட்டியது கீதையின் கற்பிதங்களே. குப்தர்கள் ஆட்சியில், பார்ப்பன ஆதிக்கம் மீண்டும் நிலை நாட்டப்பட்டது. இந்த ஆட்சியில் மக்களின் சமூகப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது உண்மை தான். ஆனால் அதற்கு, நாட்டு நிர்வாக அமைப்பில் பவுத்த புரட்சி நிறுவி இருந்த நல்ல அடித்தளங்கள் தான் காரணமே தவிர, குப்தர்களது திறமையல்ல என்று கூறுகிறார் பிரேம்நாத் பசாஸ்.
- இதற்கு 600 ஆண்டுகளுக்கு முன்பு, குப்தர்களைப் போலவே மவுரியர் களும் பேரரசைக் கட்டி ஆண்டார்கள். அசோகரும் மவுரியப் பேரரசர் தான்; அவர்கள் புத்தரின் அறநெறிக் கோட்பாடுகளைப் பரப்பி நல்லாட்சி நடத்தினார்கள். ஆனால் குப்தர்களோ, அறநெறியை கைவிட்டு, போரை நாடினார்கள் என்கிறார் ஆய்வாளர் கோசாம்பி. அசோகர் நிறுவிய கல்வெட்டுத் தூண்களில், சமுத்திரகுப்தன், தனது போராட்ட வெற்றிகளையும், தனது புகழையும் பொறித்துக் கொண்டான்.
- பவுத்தப் புரட்சியின்போது அமு லில் இருந்த சமூக நடைமுறைகள் அனைத்தும், குப்தர்கள் ஆட்சியில் மாற்றியமைக்கப்பட்டன. பார்ப்பன புரோகிதங்களும், சாதியமும், யாகங்களும், சடங்குகளும் முக்கியத்துவம் பெற்றதோடு, பார்ப்பனர்களுக்கு, குப்தர்கள் ஏராளமாக நிலங்களையும் வழங்கினார்கள். பசுக்கள் பார்ப்பனர்களுக்கு தானமாக வழங்கப்பட்டன. மக்கள் மொழியான ‘பிராகிருதம்’ ஒழிந்து, சமஸ்கிருதம் அரசு மொழியாகியது.
- குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த ஆரியபட்டர் (கி.பி.476) கிரேக்க, எகிப்திய, பாபிலோனிய மொழிகளிலிருந்த வானவியல், கணிதம் பற்றிய குறிப்புகளைக் கற்றுத் தேர்ந்திருந்தார். அந்த அடிப்படை யில் கோப்பர்நிக்கஸ் காலத்துக்கு முன்பே, கி.பி.499-ல் சூரிய மண்டலம் பற்றிய கருத்துகளை வெளியிட்டார். பூமி தனது அச்சில் சுழன்று வரும் கோளம் என்றும், பூமி மற்றும் சந்திரன் நிழல்களே கிரகணங்கள் என்றும், ஆண்டுக்கு 365.3586805 நாட்கள் என்றும் அவர் கூறினார். ஆரியபட்டர், சோதிடம், சாகதகம் ஆகியவற்றை அறிவியல் அல்ல என்று புறக்கணித்தார். ஆனால், ஆரியபட்டரின் புரட்சிகர கருத்துக்களை, பார்ப்பனர்களும், குப்த ஆட்சியாளர்களும் ஏற்றுக் கொள்ள வில்லை. மாறாக, அதே காலத்தில் வாழ்ந்தவரான வராகமிகிரர் என்ற பிற்போக்கு வாதி, வானவியலை சோதிடம், சாதகம், கணிதம் என்று மூன்றாகப் பிரித்து, சோதிடத்துக்கும், சாதகத்துக்கும் முக்கியத்துவம் அளித்தார்.

  பார்ப்பனர்கள் ஆர்யபட்டரைப் புறக்கணித்து வராகமிகிரரை ஏற்றுக் கொண்டனர். வானவியல், கணிதம் ஆகியன வளர்ச்சி அடையாமல் தடுத்தனர். (இந்தியாவின் செயற்கைக்கோள் ஒன்றுக்கு ‘ஆர்யபட்டா’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.)
- குப்தர்கள் ஆட்சியில் சட்ட நூல்கள், ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை பற்றிய நூல்கள் எழுதப்பட்டன. ஏராளமான புராணக் கதைகளும் அப்போதுதான் உற்பத்தியாயின. ஆனாலும் கலை, இலக்கியம், அறிவியல் ஆகிய அனைத்தி லும் பார்ப்பனிய உற் பத்திகள் கீழ்த்தரமானவையாகவும், சொந்த முயற்சி யின்றி திருடப்பட்டதாகவும் இருந்தன என்கிறார் நூலாசிரியர் பசாஸ்.
- பவுத்தம் உருவாக்கிய மக்களாட்சி தத்துவத்தை ஒழித்தது குப்தர்களே என்கிறார் வரலாற்று ஆய்வாளர் ஆர்.சி.மஜும்தார் புதிய கலை இலக்கியங்களை உற்பத்தி செய்த பார்ப்பனர்கள், பழைய சாத்திரங்களில் மாற்றம் செய்வது, இடைச் செருகுவது, புதிதாக சேர்ப்பது என்ற அனைத்து கபட வேலைகளையும் செய்தனர். பார்ப்பனர்களின் முக்கிய எதிரியான கவுதம புத்தர்-இந்துக் கடவுளான விஷ்ணுவின் ஒன்பதாவது அவதாரமாக குப்தர்கள் காலத்தில் அறிவிக்கப்பட்டார்.

# ‘கீதை’யின் வஞ்சகப் பின்னணி!

### சேலம் மாநாட்டுச் சிந்தனை

- கீதையின் காலம் குறித்தும் - அது ஒருவரால் தான் இயற்றப்பட்டது என்பது குறித்தும் - குழப்பமான கருத்துகள் நிலவுகின்றன.
- “சாதியக் கட்டமைப்பின் இறுக்கம் நொறுங்கிக் கொண்டிருந்த கால கட்டத்தில் மீண்டும் சாதியக் கட்டுமானத்தை வலிமைப் படுத்தவே கீதை வந்தது என்கிறார், ஆய்வாளர் டி.பி.ஹில்.
- பாரதப் போரில் அர்ச்சுணனுக்கு, தேரோட்டுபவனாக இருந்த கிருஷ்ணன், அர்ச்சுனனுக்கு கூறிய அறிவுரைதான் கீதை என்ற கருத்தை ஏற்க இயலாது. போர்க் களத்தில் போர்ச் சூழல் பற்றிய உரையாடல்கள் தான் நடந்திருக்க முடியுமே தவிர வேறு பல தத்துவங்கள் பற்றிப் பேச, போர்க் களம் உரிய இடமாக இருக்காது. எனவே கீதையின் உள்ளடக்கம், பிற்காலத்தில் விரிவுபடுத்தி எழுதப் பட்டது என்பது பல ஆய்வாளர் களின் கருத்து. ஆனால் பகவத்கீதை இறைவனால் ‘அருளப்பட்டது’ என்று பார்ப்பனர்கள் கூறு கிறார்கள்.
- கீதை - ஒரு வரலாற்று நிகழ்வு என்பது சந்தேகத்துக்குரியது என்கிறார் காந்தியார். கீதையில் இடைச்செருகல்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறார் டாக்டர் இராதாகிருஷ்ணன். ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட வர்கள் கீதையை எழுதினார்கள் என்பதை மட்டும் அவர் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்.
- கீதை எழுதப்பட்ட காலம் கி.மு.500 முதல் கி.பி. 300 வரை என்கிறார்கள். அதாவது 800 ஆண்டுகால இடை வெளியில் கீதை எழுதப்பட்டதாம். காலத்தைத் தவறாக நிர்ணயிக்க முயலுகிறார்கள் என்று சந்தேகத்தையே இது உருவாக்கு கிறது. உண்மையில் கி.பி.400க்குப் பிறகே கீதை எழுதப்பட்டுள்ளது என்பது பல ஆய்வாளர்களின் கருத்து.
- இந்தியாவின் முதல் பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலான வாரன் ஹேஸ்டிங்ஸ் வேண்டு கோளை ஏற்று, கி.பி.1785-ல் சார்லஸ் வில்கின்ஸ் என்பவர் முதன்முதலாக கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பல மேலை நாட்டு ஆய்வாளர்கள், இதற்குப் பிறகு தான் கீதையை ஆராய்ச்சி செய்யத் துவங்கினர்.
- பவுத்த மதம் தோன்றுவதற்கு முன்பே கீதை எழுதப்பட்டு விட்டது என்ற நேருவின் கருத்தை, வரலாற்று ஆய்வாளர் டி.டி. கோசாம்பி மறுக்கிறார். “காந்தியின் ஆசிரமத்தில் நாள்தோறும், கீதையின் இரண்டாவது அத்தியா யத்தில் உள்ள சுலோகங்கள் 55 முதல் 82 வரை பசனைப் பாடல் களாகப் பாடப்பட்டு வந்தன. இவை பவுத்தக் கருத்துக்களையே எதிராக வைக்கின்றன. பவுத்தக் கோட்பாடுகளைப் பற்றிய புரிதல் இல்லாமல், இந்த சுலோகங்களை எழுதியிருக்கவே முடியாது. பவுத்தம் கூறிய ‘கரும வினை யிலிருந்து விடுபடுதல்’ என்ற தத்துவத்தையே, இந்த சுலோகங்கள் கூறுகின்றன” என்கிறார் ஆய்வாளர் டி.டி. கோசாம்பி.
- கடந்த 16 நூற்றாண்டுகளாக பகவத் கீதை இந்துக்களால், பார்ப்பனர் களால் பக்தி யுடன் படிக்கப்பட்டு வருகிறது. இருந்தும், இந்தக்களின் ஒழுக்க நெறியை கீதை ஏன் வளர்க்கவில்லை?
- ரிக் வேத காலத்தில் கருநிறம் கொண்ட ‘அரக்கனாக’ ஆரியர் களால் ஒதுக்கப்பட்ட கிருஷ்ணன், பகவத் கீதையில் விஷ்ணுவின் அவதாரமாக உயர்த்தப்படுகிறான். என்ன காரணம்? ஆரியரல்லா தோருக்கு முக்கியத் துவம் கொடுத்து பார்ப்பனியத்தை மக்களி டையே பரவலாக்குவதற்கான சூழ்ச்சியே, இது
- நூலாசிரியர் பிரேம்நாத் பசாஸ் கூறுகிறார்: “சத்திரியர்கள் தான் பவுத்தப் புரட்சியை முன்னின்று நடத்தினர். பவுத்தப் புரட்சியை நசுக்கும் முயற்சிகளுக்கு இடை யூறாக இருக்கக் கூடியவர்களும் சத்திரியர்கள் தான். எனவே புதிய பார்ப்பனியத்தின் பாடலை (கீதையை) சத்திரியர் வாயில் பாட வைத்தனர். அதுவே புரட்சியைப் புறங்காணுவதற்குப் போதுமான தாக இருந்தது.

  பார்ப்பனியத்திடம் பவுத்தம் தனது தோல்வியை ஒப்புக் கொண்டு விட்ட அந்தச் சூழலில், கீதை ஆசிரியன், அர்ச்சுனனது பாத்திரத் தில் சித்தரிக்கும் இளைஞனைப் போன்ற படித்த, படிக்காத எண்ணற்ற இளைஞர்கள் இந்தியா வில் இருந்திருக்க வேண்டும். அந்த இளைஞர்களைக் கவர்ந்து இழுத்து, தங்கள் வலையில் சிக்க வைக்கவும், வேதாந்த மதத்தில் பிடிப்புள்ளவர்களாக மாற்றும் வஞ்சக நோக்கத்துடனும்தான் பகவத்கீதை இயற்றப்பட்டது” என்கிறார் ‘இந்திய வரலாற்றில் பகவத் கீதை’யை எழுதிய நூலாசிரியர் பசாஸ்.
- “ஈவிரக்கமற்ற குரூரம், தார்மீக மதிப்புகள் அனைத்தையும் கை விடுதல், மனித நேயமற்ற செயல் களில் ஈடுபடுதல், நாகரீகமின்றி நடந்து கொள்ளுதல், மூர்க்கத்தனம் ஆகிய அனைத்தும் மகாபாரதம் போரின்போது கடைபிடிக்கப் பட்ட தீ நெறிகளாகும். இத் தீய நெறிகள்தான் மனித உள்ளத்தில் அவ நம்பிக்கையும், உருவாக்கக் கூடியவையாக இருந்தன. இந்த அவநம்பிக்கையும் சரணாகதி உணர்வும், மறு உலக நம்பிக்கை யும் தான் கீதை உரைக்கும் தத்து வத்தின் அடிப்படைகளாகும்” என்று அழுத்தமாகக் கூறுகிறார் நூலாசிரியர் பசாஸ்.


நாள்காட்டி தயார்!
சேலம் மாநாட்டில்
கிடைக்கும்!
நாள்காட்டியின் :
விலை : ரூ. 60
தொடர்புக்கு : தபசி. குமரன்,
தலைமைக் கழகச் செயலாளர்,
பேசி: 9941759641



சேலம் மாநாட்டில்
கிடைக்கும்!
‘நிமிர்’
கழக மாத இதழ்
பேராசிரியர் அரசு
வ. கீதா
ஆய்வாளர்
ஆர். முத்துக்குமார்
பேராசிரியர் ஜெயரஞ்சன்
எழுத்தாளர் ஜெயராணி
கட்டுரைகளுடன்
கருத்துக் கருவூலமாக
வெளி வருகிறது.

# மோடி அறிவிப்பால் கறுப்புப் பணம் ஒழிந்து விடுமா?

**பேராசிரியர் ஜெயரஞ்சன்**

கறுப்புப் பணம் உள்நாட்டில் முதலீடு செய்யப்படுவது மிகவும் சொற்பம். இதுகுறித்து ஆய்வு நடத்திய தேவ்கர் என்ற பொருளாதார வல்லுநர், 2010ஆம் ஆண்டு அவர் வெளியிட்ட 'The Driver and Dynamics of Illicit Financial Flows' என்ற நெடிய ஆய்வுக் கட்டுரையில், இந்திய நாட்டில் உருவாகும் கறுப்புப் பணத்தில் ஐந்தில் ஒரு பகுதி மட்டுமே உள்நாட்டு சொத்துகளில் முதலீடு செய்யப்படுவதாக நிறுவுகிறார். மீதமுள்ள கறுப்புப் பணம் அனைத்தும் வெளிநாடுகளில்தான் முதலீடு செய்யப்படு கிறது. இத்தகைய பணம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குத்தான் பெருமளவில் சென்றடைகின்றன என்பதையும் அவர் பொதுவெளியில் உள்ள புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி கண்டுபிடித்துள்ளார். இவ்வாறு வெளியேறும் பணத்தின் அளவின்படி பார்த்தால் இந்தியா, உலகிலேயே மூன்றாவது இடத்தில் உள்ளது.

மிக முக்கியமாக, அவரது ஆய்வின் வாயிலாக நாம் நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட கள்ளப் பணத்தின் (அ) கறுப்புப் பணத்தின் அளவில் குறைந்தபட்ச மதிப்பீட்டை தெரிந்து கொள்ள முடிகிறது. அவர், நமது தாய்த் திருநாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி புள்ளிவிவரங்களை அலசுகிறார். இந்திய நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருள்களின் மதிப்பும் அளவும் மற்றும் அதேபோல் இறக்குமதியான பொருள்களின் அளவு மற்றும் மதிப்பு ஆகியவற்றை எடுத்துக் கொள்கிறார். இந்தப் புள்ளிவிவரத்தை, எந்த நாடுகள் இந்தியாவிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்கின்றனவோ அந்த நாட்டின் ஏற்றுமதி/இறக்குமதி புள்ளிவிவரங்களோடு ஒப்பிட்டு அதில் வரும் வேறுபாடுகளை கண்டடைகிறார்.

எடுத்துக்காட்டாக, பிரான்ஸ் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு மின்சாரம் தயாரிக்கத் தேவையான உயர் தொழில்நுட்பக் கருவிகள் வாங்கப்படுவதாகக் கொள்வோம். அதற்கு இந்திய நிறுவனம் பிரான்ஸ் நிறுவனத்துக்கு பணம் கொடுக்க வேண்டும். இவ்வாறு பல நிறுவனங்கள் பல நாடுகளிலிருந்து தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்யும். இவை அனைத்தும் வகைப்படுத்தப்பட்டு அந்த ஆண்டு இந்தியா, பிரான்ஸ் நாட்டிலிருந்து இத்தனை இயந்திரங்களை இவ்வளவு விலைக்கு வாங்கியது என்ற தகவல் தொகுப்பு இந்திய அரசின் வர்த்தக அமைச்சகத்தால் வெளியிடப்படும். இதே போன்றதொரு தகவல் தொகுப்பை பிரான்ஸ் அரசின் வர்த்தக அமைச்சகமும் வெளியிடும். இந்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரப்படி, 2014ஆம் ஆண்டு ரூ. 5000 கோடி மதிப்பிலான இயந்திரங்கள் பிரான்ஸிலிருந்து வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருப்பதாகக் கொள்வோம். அதே ஆண்டு பிரான்ஸ் நாடு ரூ 2,000 கோடி மதிப்புள்ள இயந்திரங்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதியானதாக தெரிவித்திருப்பதாகக் கொள்வோம். இந்த இரு புள்ளிவிவரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ரூ 3,000 கோடி இந்தியாவிலிருந்து வெளியேறி இருப்பதும் (இயந்திரங்கள் வாங்குவது என்ற பெயரில்) ஆனால் அது பிரான்ஸ் நாட்டின் கணக்கில் வராததும் தெரியவரும். இந்த ரூ. 3,000 கோடியும் இந்தியாவிலிருந்து இறக்குமதி என்ற பெயரில் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்ட கள்ளப் பணம் ஆகும். இதைத்தான் Over Invoicing/ Under Invoicing மற்றும் Re-Invoicing என்று அழைக்கிறார்கள்.

இந்த தில்லுமுல்லுகளை விரிவாக விளக்க நான் முற்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் துல்லியமாகக்கூட விளக்க முற்படவில்லை. இதுபோன்றெல்லாம் கள்ளப் பணம் வெளியேறுகிறது என்பதை விவரிக்க முயன்றுள்ளேன். இத்தகைய தில்லுமுல்லு பெருமளவில் இந்தியாவில் மட்டுமின்றி, வளரும் நாடுகள் குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பெருமளவில் நடைபெறுகிறது என்பதை கள்ளப் பணம் குறித்த பல ஆய்வுகளும் சுட்டிக் காட்டுகின்றன.

**வெளியேறும் கள்ளப் பணத்தின் அளவு:** உங்களுக்கு தலைசுற்றல் ஏற்படும் என்றால் இக்கட்டுரையை மேலும் படிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன். ஏற்றுமதி/இறக்குமதி என்ற வர்த்தக புள்ளிவிவரத் தரவுகளின் அடிப்படையில், 2004ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் Mispricing என்று பொதுவாக அழைக்கப்படும் Over/Under/Re-Invoicing ஆகிய முறைகளைப் பயன்படுத்தி இந்தியாவிலிருந்து வெளியேறிய பணத்தின் அளவை கணக்கிட்ட ஆய்வாளர்கள் மிரண்டுவிட்டனர். இந்த பத்தாண்டுகளில் இவ்வாறு இந்தியாவைவிட்டு வெளியே கொண்டு செல்லப்பட்ட கள்ளப் பணத்தின் அளவு ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ. 34,69,972கோடிகளாகும். 2004ஆம் ஆண்டில் இவ்வாறு கொண்டுசெல்லப்பட்ட கள்ளப் பணத்தின் அளவு ரூ 13,60,000கோடியாகும். பத்தே ஆண்டுகளில் இந்தியாவைவிட்டு வெளியேறிய குறைந்தபட்ச மதிப்பு எத்தனை கோடானுகோடிகள் என்பதை புரிந்துகொள்ள மேலும் பல புள்ளிவிவரங்கள் உள்ளன. இத்தகைய மதிப்பீடுகள் குறைந்தபட்ச மதிப்பீடுகள் மட்டுமே. ஏனெனில், பொருள் வர்த்தகத்தில் மட்டுமே இத்தனை தில்லுமுல்லுகள். சேவை வர்த்தகம் இந்தியா போன்ற நாட்டில் மிகப்பெரிய ஒரு துறையாகும். பல ஆயிரம் கோடிகளுக்கு வெளிநாடுகளுக்கு வர்த்தகம் நடைபெறும் ஒரு துறை. Software கம்பெனிகளின் வருமானம் எல்லாம் சேவை வர்த்தகத்திலிருந்து வருவதுதான். இந்தத் துறையின் (சேவை) வாயிலாக வெளியேற்றப்படும் பணமோ அல்லது உள்ளே கொண்டுவரப்படும் பணமோ இதில் அடங்காது. ஆகவேதான் இந்த ரூ. 56 லட்சம் கோடி என்பது குறைந்தபட்ச மதிப்பீடு என அந்த ஆய்வு கூறுகிறது.

ஆக, சராசரியாக ஆண்டுக்கு ரூ.35 லட்சம் கோடி கள்ளப் பணம் பன்னாட்டு வர்த்தகம் வாயிலாக வெளியேறியிருப்பதாகக் கொண்டால், மிகக்குறைந்த அளவாக கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து வெளியே கொண்டுசெல்லப்பட்ட கள்ளப் பணத்தின் அளவு ரூ. 350 இலட்சம் கோடியாகும். இவ்வாறு Mispricing வழியாக வெளியே கொண்டு செல்லப்பட்ட கள்ளப் பணம், மொத்த கள்ளப் பணத்தில் ஏறத்தாழ 84 விழுக்காடு ஆகும். இம்முறையின்றி வேறுசில வழிகளும் இருக்கின்றன. அவற்றை நான் இங்கு விவாதிக்கவில்லை.

இவ்வாறு கொண்டு செல்லப்படும் பணம் எங்கு செல்கிறது ?

இவ்வாறு கொண்டு செல்லப்படும் கள்ளப் பணத்தில் ஒரு சிறிய அளவு மொரீஷியஸ் மற்றும் சிங்கப்பூர் வழியாக (PN) அந்நிய முதலீடு என்ற பெயரில் இங்கு வந்துசேரும். ஆனால் இதுவொரு சிறு துளி. மற்ற பணமெல்லாம் அந்தந்த நாடுகளில் முதலீடு செய்யப்படுகின்றன. அதனால்தான் லண்டன் ஹோட்டல், சிங்கப்பூர் ஹோட்டல் என, பல முதலீடுகள்பற்றி வழக்குகளும் செய்திகளும் வருகின்றன. இவ்வாறு வரும் வழக்குகள் அபூர்வமானவை. இந்த வளர்ந்த நாடுகளை முதலீடுகளுக்குத் தேர்ந்தெடுக்க முக்கியதொரு காரணம், அந்நாடுகளின் பண மதிப்பு குன்றுவதில்லை. சொத்து மதிப்பு உயர்ந்து கொண்டேயிருக்கும். சட்டம், ஒழுங்கு பாதுகாப்பு இருக்கும். இந்தியா போன்று ஒருநாள் இரவில், 'இந்தப் பணம் செல்லாது' என்று கோமாளி அறிவிப்புகளும் வராது. அதை இங்கிருக்கும் பத்திரிகைகளும் நடுத்தர வர்க்கமும் கைகொட்டி தேசியம் என்ற பெயரால் வரவேற்பது அங்கு நடக்காது. இவை அனைத்தும் கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களுக்குத் தெரிவதால்தான் இவ்வளவு பணம் அங்கு கொண்டுசெல்லப்பட்டு முதலீடு செய்யப்படுகிறது.

> **சராசரியாக ஆண்டுக்கு ரூ.35 லட்சம் கோடி கள்ளப் பணம் பன்னாட்டு வர்த்தகம் வாயிலாக வெளியேறுகிறது**

இவ்வாறு கொண்டுசெல்லப்படும் பணம் முக்கியமாக இரண்டு துறைகள் வழியாக வெளியேறுகிறது என மற்றுமொரு ஆய்வு கண்டுள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்பு, நாட்டிலுள்ள கள்ளப் பணம் குறித்து ஹைதராபாத் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் நரசிம்ம ரெட்டி ஓர் ஆய்வை மேற்கொண்டார்.

அந்த ஆய்வில் அதிர்ச்சிமிகுந்த கண்டுபிடிப்பை அவர் வந்தடைந்தார். பண்ட ஏற்றுமதி, இறக்குமதியில் அணு உலை மற்றும் மின்சாரம் தயாரிக்கப் பயன்படும் ஆலைகளை நிறுவ இறக்குமதி செய்யப்படும் முறையில்தான் 60 விழுக்காடுக்கும் மேலான கள்ளப் பணம் வெளியேறியது என்பதை அந்த ஆய்வு சான்றுகளோடு நிறுவுகிறது. எனவேதான், தமிழக கடற்கரைப் பகுதிகளில் இத்தனை அனல்மின் நிலையங்கள் தனியாரால் தொடங்க அனுமதிக்கப்பட்டு, முதலீடும் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆலைகளின் வாயிலாக எத்தனை லட்சம் கோடி கறுப்புப் பணம் வெளியே கொண்டு செல்லப்பட்டிருக்கும், உருவாக்கப்பட்டிருக்கும் என்பதை உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன். அதனால்தான் நாம் நமது மின்சாரத்துக்கு இவ்வளவு விலை கொடுக்கிறோம்.

இங்கு முக்கியமான ஒரு கூறையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்திய வணிக மற்றும் தொழில்துறை சார்ந்த நிபுணர்களும் மெத்தப்படித்த மேதாவி பத்திரிகையாளர்கள் பலரும் Cashless Economy எனும் மின்னணு வர்த்தகம் அல்லது பணப் பரிமாற்றம் வந்துவிட்டால் கறுப்புப் பணம் ஒழிந்துவிடும் எனக் கூறிவருகின்றனர். நாட்டின் நிதியமைச்சர் இந்த 'செல்லாத' அறிவிப்பை விளக்கிப் பேசும்போது, இந்த 'செல்லாத' அறிவிப்பு நாட்டில் மின்னணு வர்த்தகத்தை நோக்கி மக்களைத் தள்ளுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு என்றும் கூறினார். மக்கள், பணத்தை கையாள்வதில் தான் ஊழல் உருவாகிறதாம். வங்கி அட்டைகளைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டால் அதற்கு இடம் இருக்காதாம். இதுவும் ஒரு அரசியல் கருத்தாக்கம் என்றுதான் நாம் கொள்ள வேண்டும். அந்த நிலை உருவாவதற்கான தோதுகள் நம்மிடம் இப்போது இல்லை என்பதுபோன்ற நடைமுறைகள்சார்ந்த சிக்கல்கள் எல்லாம் இருக்கின்றன. ஆதார் அட்டையை திணித்ததுபோல அந்த அட்டையையும் திணிக்கமுடியாதா எங்களால் எனவும் வினவுகின்றனர். நீங்கள் நினைத்தால் எதையும் திணிக்கலாம். ஆனால் நீங்கள் கூறும் பயன்களை நினைத்தால் எப்படிச் சிரிப்பது என்றுதான் புரியவில்லை.

இந்தியாவிலிருந்து வர்த்தகம் (Under Invoicing, Over Invoicing, Re - Invoicing) வாயிலாக வருடந்தோறும் வெளியே கொண்டுசெல்லப்படும் பல லட்சம் கோடி கறுப்புப் பணம் ஸ்தூல ரூபாய் நோட்டுகளாக கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டவையல்ல. அனைத்தும் மின்னணு பரிமாற்றம் வழியாக நொடிப் பொழுதுகளில் வெளியேறியவைதான். 'நான் செய்த இறக்குமதிக்காக இத்தனை கோடிகள் அந்த நாட்டுக்கு வழங்குகிறேன்' எனக்கூறி சென்ற பணம்தானே இவ்வளவும். உண்மை இவ்வாறு இருக்க, மின்னணு பரிமாற்று முறை வந்தால் கறுப்புப் பணம் ஒழிந்துவிடும் என்று கூறுவதும், சத்தியம் செய்வதும் யாரை ஏமாற்ற ? அப்படி ஒரு நிலை ஏற்படுமாயின் அதிலும் காசு பார்க்கலாம் என சில முதலாளிகளுக்கு நமது அரசு துணை போவதெல்லாம் வேறு என்ன ? உங்கள் பணம் வங்கியில் உள்ளது. மின் வாரியத்துக்கு நீங்கள் பணம் செலுத்த வங்கிகளின் மின்னணு பரிமாற்று முறையை பயன்படுத்தும்போது, நாம் ஒவ்வொருமுறையும் ஒரு சேவைக் கட்டணத்தையும் கூடுதலாக செலுத்த வேண்டும். இது பரவலாகும்போது அந்த பரிமாற்று முறையை நடத்துபவர்கள் எவ்வளவு பணம் பண்ணலாம் என்பதை எண்ணிப் பாருங்கள். அவர்கள் ஒரு சேவையை வழங்குகிறார்கள். அதற்கு ஒரு கட்டணம் என்ற வாதம் சரி என எடுத்துக் கொள்வோம். அதேசமயத்தில், ஒருவர் அதைப் பயன்படுத்த விரும்பவில்லை என்றால் அதற்கு மாற்றுவழி கண்டிப்பாக இருக்க வேண்டும். உதாரணமாக, வெளிநாடுகளில் கட்டண சாலைகள் இருப்பதுபோல். நீங்கள் விரும்பினால் அதில் பயணிக்கலாம். இல்லையென்றால் கட்டணமில்லா சாலையில் அதற்கு இணையாகவும் பயணிக்கலாம். ஆனால் இங்கோ, கட்டணச் சாலையில் மட்டுமே பயணிக்கும் ஒரு கொள்ளைத் திட்டத்தை அரசே முன்னின்று செயல்படுத்துவது கவனத்தில் கொள்ளத்தக்கது. புதியதொரு அமைப்பு நம் நாட்டில் கொண்டுவரப்பட்டால் அதில் இருக்கும் வாய்ப்புகளை நீக்கிவிட்டு, நம்மை கட்டாயப்படுத்துவது என்பது இந்தியாவுக்கே உரித்தான ஒன்று. அதுதான் 'Cashless Economy' என்று கூறுபவர்கள் 'ஆடு நனைகிறதே என ஓநாய் அழுத' கதையை நமக்கு நினைவூட்டுகிறது.

தலைமை அமைச்சரின் கறுப்புப் பணத்தின்மீதான போர் என்றும், Surgical Strike என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டு வரவேற்கப்படும் அறிவிப்பு, கள்ளப் பணத்தின் இந்தக் கூறை தொட்டுக்கூட பார்க்க முடியாது. அதனால்தான் வணிகப் பத்திரிகைகளில் கருத்து தெரிவிக்கும் பொருளாதார வல்லுநர்களும் நடுத்தர வர்க்கங்களின் அரைகுறை புரிதலைக்கூட முழுப் புரிதலாக காட்டிக்கொள்ளும் கணக்கர்கள், செய்தியாளர்களும் கூத்தாடி வருகிறார்கள். மக்களின் அவலங்களை சிறிய தியாகம் எனவும் எதிர்காலம் சிறக்கும் எனவும் பம்மாத்துக் கதைகளை கூறி வருகிறார்கள். நமது சமுதாயம் எவ்வாறு சீர்கெட்டுள்ளது என்பதற்கு இந்தப் புரிதலே மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. இதில் வெற்றிபெற்றவர்கள் யார் ? இந்தப் புரிதலை பயன்படுத்திக்கொண்டு பல கோடானகோடி கறுப்புப் பணம்பற்றி சிறு துரும்பைக்கூட அசைக்காத ஆளும் நடுவண் அரசு கள்ளப் பணத்துக்கு எதிரான போர் என மார்தட்டிக் கொள்வது எத்தகைய நடிப்பு என்பதை அறிந்துகொள்வோம்.

இந்தியாவிலிருந்து 2014ஆம் ஆண்டு வெளியேறிய கறுப்புப் பணத்தின் அளவு ரூ.56.5 லட்சம் கோடி. இந்தியாவில் சுற்றில் உள்ள பணத்தின் அளவு ரூ.16 லட்சம் கோடி. அதில் ஏறத்தாழ ரூ.14 லட்சம் கோடி செல்லாததாக அறிவிக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு அறிவிக்கப்பட்ட பணத்தில் கறுப்புப் பணம் என்பது நான்கில் ஒரு பங்கு என்று வைத்துக்கொண்டால்கூட ரூ.3.5 லட்சம் கோடி. ஒரு ஆண்டில் வெளியே கொண்டுசெல்லப்பட்ட பணம் ரூ.56.5 லட்சம் கோடி. எவ்வளவு கறுப்புப் பணத்தை, நோட்டுகள் செல்லாது என்று அறிவித்ததன்வாயிலாக அழிக்கமுடியும் ? உள்நாட்டில் நோட்டுகளாக உள்ள ஒரு சிறு பகுதியைத்தான் அழிக்க முடியும். மிகப்பெரும் பகுதி வெளியே அல்லவா உள்ளது. ஆக, இந்த அறிவிப்பின் உள் அரசியல் என்ன என்பது வெளிச்சம் ஆகிறது அல்லவா ? கறுப்புப் பணத்தை ஒழிக்காமலேயே, ஒழித்த மாவீரன் என்ற பிம்பம் மற்ற எல்லா தோல்விகளையும் மறைக்க பாஜக-வுக்கு இப்போது தேவை. அதற்கு பலிகடா எப்போதும்போல் சாமானியன். சாமானியனை காவு கொடுக்க கொள்கையளவில் துணைபோவது நடுத்தர வர்க்கம். கள்ளப் பணக்காரன் மோனாலிசா சிரிப்போடு கடந்துபோவது புலனாகிறதா ? அவன் பணம்தான் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் முதலீடு செய்யப்பட்டுவிட்டதே ! அவன் தூங்கவில்லை என்பது உண்மையாயின், கவலையால் இருக்காது; அந்த மகிழ்ச்சியால் இருக்கும்.

***கட்டுரையாளர் :*** *ஜெ.ஜெயரஞ்சன் - சென்னை மாற்றுவளர்ச்சி மையத்தை (ஐடிஏ) உருவாக்கி, தொடக்கம் முதல் இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். தமிழக சமூக, பொருளாதாரப் பிரச்னைகள் குறித்து கடந்த முப்பது ஆண்டுகளாக ஆய்வுகள் மேற்கொண்டு வருகிறார். இவரது ஆய்வுக் கட்டுரைகள் முக்கிய ஆய்விதழ்களிலும், புத்தகங்களிலும் வெளிவந்துள்ளன.*

**நன்றி: 'மின்னம்பலம்'**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘துக்ளக்’ சோவின் இனப்பற்று; படம் பிடிக்கிறார், பாவலரேறு பெருஞ்சித்திரனார்

*பாவலரேறு பெருஞ்சித்திரனார் 1973ஆம் ஆண்டு ‘தென்மொழி’ ஏட்டில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி:*

‘இராசாசி நினைவாலயத்துக்கு’ இவர்கள் தரும் விளம்பரம், காந்திக்குக் கூடத் தந்ததில்லை. ‘தமிழகத்தில் இராசாசி காலடிப்பட்ட இடங்களை யெல்லாம் புண்ணியதலமாகக் கருத வேண்டும்’ என்று ‘சுதந்திர’க்கட்சி சா. கணேசன் வெளிப்படுத்திய கருத்தை இவர்கள் மிகப் பெருமையுடன் வெளி யிட்டுக் கொண்டனர். (சா. கணேசன் மூளையில் இவ்வளவு அடிமைத்தனம் புகுந்திருக்கக் கூடாது) துக்ளக்கில் ‘சோ’ இவர்கள் இனத் தலைவர் இராசாசியைப் பற்றி இப்படி எழுதி யிருந்தார்:

“இராசாசியைப் பாராட்டுவதற்கோ அல்லது அவரிடம் குற்றம் காண் பதற்கோ அவருக்கு நிகரானவர்கள் யாரும் இந்நாட்டில் இல்லாமல் போய் விட்டார்கள்... மனம், சிந்தனை, வாக்கு, செயல் எல்லாவற்றிலும் பரிபூரணத் தூய்மையுடன் விளங்கிய ஒரு அசாதாரணமான மனிதரை மிகச் சாதாரணமாக மதித்துவிட்ட மடத் தனத்தின் விளைவுகளிலிருந்து இந்த நாடு என்று விடுபடுமோ தெரியாது... இராசாசி தெய்வ நம்பிக்கை மிகுந்தவர். அந்த ஒரு கரணியத்திற்காகவாவது அவர் வாழ்ந்த இந்த ‘பூமி’யை இறைவன் காப்பாற்றட்டும்.”

- எப்படி ? துக்ளக் ‘சோ’வின் தூக்கி வைத்துப் பேசும் தன்மை, ‘அவாள்’ இனத்துத் தலைவர் என்றால் உலகத்துக்கே தெய்வம்; அவர்களைவிட மேம்பட்டவன் ஒருவனும் இருக்க முடியாது; அல்லது இருக்கவும் கூடாது என்பது பார்ப்பனர்களின் ஒருமித்த கருத்து. இராசாசிக்கென்றே சில தனித் தன்மைகள் உண்டு. அவை அவருக் குத்தான் சொந்தம். அவர் தன்மைகள் பிறர்க்கு எப்படி வரும் ? பெரியார் இராமசாமியின் தனித்தன்மைகள் எப்படி ‘துக்ளக்’ இராமசாமிக்கு வர முடியாதோ, அப்படியே இராசாசியின் தன்மைகள் ஒரு கந்தசாமிக்கு வர முடியாது. மற்றபடி இராசாசி என்ன உலகத்துக்கே, அல்லது இந்தியாவுக்கே தெய்வமா ? அவரைப் போல் நாட்டிற்கு உழைத்தவர்கள் இல்லையா ? பார்ப்பன இனத் தலைவர் ஒருவர் இறந்து போனால், அவர் வாழ்ந்ததற்காக இறைவன் இந்தப் ‘பூமி’யைக் காப்பாற்றட்டும் என்றால் அவர் இருந்த போது ஏன் இதைக் காப்பாற்ற வில்லை ? ‘துக்ளக்’ சோ ஏன் இறைவனிடம் அப்பொழுது பரிந்துரை செய்யவில்லை. இறைவன் என்றால் அவன் பார்ப்பன இனத்துக்கு மட்டுந் தானா சொந்தம் ? அவர்களுடைய பாட்டனா அவன் ?

இவற்றிலிருந்தெல்லாம் என்ன தெரிய வருகிறது என்றால், அவர்கள் எழுதும் எழுத்தெல்லாம் அச்சாகி வருவதற்கான வாய்ப்புகளை அவர்கள் வலிய ஏற்படுத்திக் கொண்டு, மக்களை எந்த அளவில் என்றென்றும் மடையர் களாகவே, தங்கள் நல்வாழ்வுக்குத் துணைப் போகின்றவர்களாகவே மாற்றிக் கொள்கிறார்கள் என்பதை நம் மக்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும் என்பதுதான். சொல்வதைச் சொன் னால் கேட்பாருக்குக் கொஞ்சமேனும் மதி இருக்கத்தான் செய்யும். அவர்கள் சொல்லுவதைக் கொஞ்சம் கவனித் தால் போதும்; எந்த நோக்கத்தில் அவர்கள் சொல்கின்றார்கள்; எந்த நோக்கத்திற்காகச் சொல்கின்றார்கள் என்பனவெல்லாம் விளங்கிக் கொள்ள முடியும்.

தமிழர்களுக்கு இழிந்த பெயர்கள் !

‘துக்ளக்’ இராமசாமி எழுதி வரும் ‘வாசிங்டனில் நல்லதம்பி’ எனும் தொடர்கதையில் வரும் கதைத் தலை வனாக இப்பொழுதுள்ள முதலமைச் சரைத்தான் (கலைஞர்) கிண்டல் செய்து எழுதுகின்றார் என்பது எல்லோருக்குமே வெளிப்படையாகத் தெரியும். அதைப் பற்றிய ஆய்வுகள் இருக்கட்டும். ஆனால் அதில் நல்ல தம்பிக்குத் துணையாக வருபவர்களின் பெயர்களையும் அவர்கள் பேசிக் கொள் கின்ற தமிழ் ( !) உரையாடல்களையும் பார்த்தாலே ‘சோ’ என்னும் இருபதாம் நூற்றாண்டுப் பார்ப்பானுக்குத் தமிழினத்தின் மேல் எவ்வளவு எரிச்சல் - வெறுப்பு இருப்பதைக் கண்டு கொள்ளலாம். நல்லதம்பியின் நண்பன் பிசாசு, முக்கண்ணனாம் ! இன்னொரு வன் உலக்கைக் கொழுந்தாம். எப்படி ! வேடிக்கையாக இப்படி எழுதுவதாகக் கூறிக் கொண்டு தமிழ் மக்களை இழிவுபடுத்துவதும் தமிழ் மொழியைத் தாழ்த்துவதும்தான் ‘துக்ளக்’கின் நோக்கம். தனக்கு நேர்எதிரிடையான ஓர் இன அரசனின் பெயரைத் தனக்கே உரிய ‘கிண்டல்’ மனப் பான்மையுடனும் கோமாளித்தனமாக வும் சூட்டிக் கொண்டு, இப் “பிராமண” வழக்கறிஞன் எழுதி வரும் கதைகளைப் போலத்தான் அன்றைய இராமாயண, மகாபாரதங்கள் எழுதப் பெற்றன. நல்லதம்பிக் கதையில் வரும் இட்சுகாக், பர்ட்டன், நிக்சன், கீசிங்கர் முதலிய உண்மை மாந்தர்களையும், நல்லதம்பி, பிசாசு, உலக்கைக் கொழுந்து முதலிய உறுப்பினர்களை யும் எதிர்கால மக்கள் படிக்க நேர்ந்தால் முன்னையவர்களின் வரலாற்று உண்மையை அடிப்படையாகக் கொண்டு பின்னையவர்களும் வாழ்ந்து தான் இருக்க வேண்டும் என்று கருதிக் கொள்வார்களா இல்லையா ? அப்படிக் கருதிக் கொள்ள வேண்டும் என்பது தான் இந்தக் கோமாளியின் நோக்கம். மேலும் இந்தத் ‘துக்ளக்’ இராமசாமி வைத்த பிசாசு, உலக்கைக் கொழுந்து முதலிய பெயர்களைப் போலத்தான் இராமாயணத்திலும் தமிழர்களுக்கு இழிந்த பெயர்களே சூட்டப் பெற்றிருக் கின்றன. கும்பகர்ணன் (கும்பம்-குடம், கர்ணன்- காதன் குடக்காதன்) மண்டோதரி (மண்டை - பானை; உதரம் - வயிறு பானை வயிறு), சூர்ப்பநகை (சூர்ப்பம் - முறம், நகை - பல் முறப்பல்லி) இராவணன் (இரவு வண்ணன் - கறுப்பன்) முதலிய பெயர்களும் இழிவான பொருள் தரும்படி வைக்கப் பெற்றிருக்கின்றன.

நாம் அப் பெயர்களில் உள்ள இழிவு களை அறியக் கூடாது என்பதற்காக அவை வடமொழியில் வைக்கப் பெற்றுள்ளதை அறியுங்கள். அந்த இராமாயண, மகாபாரதக் கதைகளி லெல்லாம் உள்ள இழிவுகளை எடுத் தெழுதினால் இவ்வேடு கொள்ளாது. இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதி யிலேயே சென்னையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒரு பார்ப்பனன், நம் இனத்தைப் பார்த்து இவ்வாறு கிண்டல் செய்து எழுதுவதும், அதை நாம் பொறுத்துக் கொண்டிருப்பதும் நேரு மானால் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டு களுக்கு முன் இவ்வினத்தினால் நேர்ந்த - முன்னோர் பட்டபாடுகளை நினைத்தும் பார்க்க முடியாதன்றோ ? அக்காலக் கதைகளைச் சொல்லி இக் காலத்தில் அவர்களை வஞ்சம் தீர்க்க முடியாமற் போயினும், இக்காலத்தில் நம் கண் முன் நிகழும் அக்கொடுமை களை நாம் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும் ? எனவே நமக்கு அவர்கள் மேல் வளர்ந்து கொண்டு வரும் வெறுப்புணர்ச்சிக்குங்கூட அவர்களே தாம் பொறுப்பன்றி நாமோ நம் செயல்களோ பொறுப்பாவதில்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

**– ‘ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்’ நூலிலிருந்து**

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ முக்கிய அறிவிப்பு**

டிசம்பர் மாதத்தோடு சந்தா முடிவடையும் வாசகர்களுக்கு ஜனவரியிலிருந்து இதழ் அனுப்புவது நிறுத்தப்படும். தோழர்கள் சந்தாவை புதுப்பிக்க வேண்டுகிறோம்.

**– நிர்வாகி**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

*மதன வித்தன் (அகந்தையானவன்), அசுரன், ராட்சசன், கடவுள் மறுப்பாளர்களை விளிக்கும் போதெல்லாம், இதே சொற்களையே கிருஷ்ணன் பயன்படுத்துகிறான்.*

- *அரசதிகாரத்தில் இருந்த சத்திரியர்கள் - ஒரு இயக்கமாக செயல்பட்டதால் தான் பார்ப்பனர்கள், ஆதிக்க நிலை ஆட்டம் கண்டது என்பதை ‘கிருஷ்ணன்’ நன்றாகவே உணர்ந்திருந்தான். எனவே பார்ப்பனியம் பாதுகாப்புடன் நீடிக்க வேண்டுமானால் சத்திரியர்கள் ஒற்றுமைக்கு முடிவு கட்ட வேண்டும் என்றும், அவர்களின் போரிடும் ஆற்றலை மழுங்கடிக்க வேண்டும் என்றும் திட்டமிட்டான். இதற்கு நல்வாய்ப்பாக கிருஷ்ணன் மகாபாரதப் போரைப் பயன் படுத்திக் கொண்டான் என்கிறார் நூலாசிரியர்.*
- *போரில் வெற்றி பெற்று, பாண்டவர்கள் தலைநகருக்குத் திரும்பும்போது அவர்களை ஆரவாரத்துடன் வரவேற்றது பார்ப்பனர்கள் தான். பாண்டவர்களின் குலத்தினரோ, போரில் உயிரிழந்த குடும்பத்தைச் சார்ந்த வர்களோ அல்ல; பார்ப்பனக் கூட்டத்தில் நின்றிருந்த ஒரு சார்வாகன் (கடவுள் மறுப்பாளன்) யுதிஷ்டிரனைப் பார்த்து, “உற்றார் உறவினரைக் கொன்று அழித்து என்ன பயன் கண்டாய்?” என்று கோபத்துடன் கேட் கிறான் யுதிஷ்டிரன், தலைகுனிந்து நின்றான்; உடனே உயிரை மாய்த்துக் கொள்ளவும் துணிந்தான். உடனே கூடியிருந்த பார்ப்பனர்கள், “அவன் ஒரு அசுரன், கவலைப்படாதீர்கள்” என்று யுதிஷ்டிரனுக்கு ஆறுதல் கூறினர்; உடனே சார்வாகனைப் பார்ப்ப னர்கள் பிடித்து, நெருப்பிலிட்டுக் கொளுத்தி விட்டார்கள் என்று மகாபாரதம் கூறுகிறது.*
- *பாரதப் போரினால் கிருஷ்ணனின் வஞ்சகத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேறின. பார்ப்பனர்கள் மீண்டும் ஆதிக்கம் பெற்றார்கள். மரணப் படுக்கையிலிருந்த பீஷ்மன், வெற்றிவேந்தனாகிய யுதிஷ்டிரனுக்கு, கூறும் அறிவுரையே இதற்கு சரியான சான்று:*

  *“பார்ப்பனர்களுக்கு பிரம்மதானம் கொடுப்பதே வேந்தனுக்கு அழகு. பார்ப்பனர்களுக்கு அளிக்கும் தானம் அசுவமேத யாகத்தைவிட சிறந்தது. பார்ப்பனர்களுக்கு இவ்வாறு தானம் செய்வதன் மூலம் - சத்திரியன் சொர்க்கத்தை அடைகிறான். பார்ப்பனர்களுக்கும், கடவுள்களுக்கும் மட்டுமே நிலங்கள் சொந்தமாக்கப்பட வேண்டும். பார்ப்பனர்களிடமிருந்து நிலங்களைப் பறிப்பது மன்னிக்க முடியாத குற்றம். தவறிக்கூடப் பார்ப்பனரைத் தண்டிக்காதே. பார்ப்பனர்கள்தான் மனிதரில் உயர்ந்தவர்கள். நீரிலிருந்து நெருப்பு பிறக் கிறது. பார்ப்பனரிலிருந்து சத்திரியன் பிறக்கிறான். பாறையிலிருந்து இரும்பு உண்டாகிறது. இரும்பு பாறையை வெட்டும் போதும், நீர் நெருப்பை அணைக்கும் போதும் பார்ப்பனனுக்கு சத்திரியன் பகைவன் ஆகிறான். அதன் பின் அவர்கள் முகமிழந்து அழிந்து போகிறார்கள். பார்ப்பனர்களுக்குச் சமமாகத் தங்களைக் கூறிக் கொள்கிறவர்களைத் தண்டிக்க வேண்டியது அரசனது கடமை.” (மேற்கோள் ஆதாரம்: எம்.என்.ராய் எழுதிய மெட்டிரியலிசம்)*
- *“ஆத்மா அழிவற்றது; எனவே கொலை செய்வது பாவமல்ல” என்று படுகொலையை நியாயப்படுத்துகிறான் கிருஷ்ணன். (காந்தியைக் கொன்ற பார்ப்பான் கோட்சே, நீதிமன்றத்தில் தந்த வாக்கு மூலத்தில், தனது செயலுக்கு நியாயம் கற்பிக்க, கீதையின் இந்தக் கருத்தைத்தான் எடுத்துக்காட்டினான்). கிருஷ்ணனின் இந்தக் கருத்துக்கு, திலகர், டாக்டர் ராதாகிருஷ்ணன், சித்பவானந்தர் போன்ற பார்ப்பன விளக்க உரையாளர்கள் முட்டுக் கொடுக்கும் விளக்கங்களை முன் வைத்து நியாயப்படுத்துகிறார்கள்.*
- *கீதைக்கு உரை எழுதியதில் - கேரளத்தில் பிறந்த நம்பூதிரிப் பார்ப்பனரான சங்கரரும் ஒருவர். அவர் நிறுவியவை தான் சங்கர மடங்கள். சங்கரர் 32வது வயதில் இறந்து விட்டார். அவர் வாழ்ந்த காலத்தில் பவுத்தம் முழுமையாக அழிந்துவிடவும் இல்லை; இந்தியாவை விட்டு வெளியேறவும் இல்லை. அந்த நிலையில், பவுத்தத்தை முற்றிலுமாக துடைத்தெறிய வேண்டும் என்பதே பார்ப்பனர் சங்கரன் நோக்கமாக இருந்தது.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted: 22nd December 2016

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN